1995 மே 5] [பேரவைத் தலைவர்]

நான் கேட்டேன். அவர்களுடைய நடவடிக்கை இன்னும் திருந்தவில்லை என்பதைத்தான் சொன்னேனே. உங்களைப் போல் இன்னும் பலர் கொடுத்திருக்கிறார்கள். இங்கே கொடுத்த உறுப்பினர்கள் மட்டுமல்ல, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், நேற்றையதினம், இந்த அவை உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்ட பல பெரியவர்கள்கூட, வெளியிலே இருக்கிறவர்கள்கூட, எனக்குச் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு, வானொலியும், தொலைக்காட்சியும் நடந்துகொள்வது முறையற்றது என்று, அவை உறுப்பினர்கள், அமைச்சர்கள் மட்டுமல்லாது வெளியிலே இருக்கின்ற பல பெரியவர்கள்கூட எனக்குக் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பெரியவர்களுடைய சாபம் இவர்களைச் சும்மா விடாது என்றுகூட நான் கருதுகிறேன். *(குறுக்கீடு)* மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

2. பேரவை நிகழ்ச்சிகளை தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கருத்துக்களை தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ஒன்று, இந்தத் தொலைக்காட்சியை பற்றியும், வானொலியையும் பற்றியும், மத்திய அரசுக்கு, இந்தச் சபையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள பேரவைத் தலைவர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவதாக, கிராமத்திலே, கிராம மக்கள் ஒரு உதாரணம் சொல்வார்கள், நாய் வாலை நிமிர்த்த முடியாது என்று. அதுபோல, தொலைக்காட்சியையும், வானொலியையும் நாம் சரி செய்யவே முடியாது. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருக்கும்வரை அவர்கள், அவர்களுடைய பிரச்சார பீரங்கியாகத்தான் தொடர்ந்து வேலை செய்து வருகிறார்கள். ஆகையால், தனியார் டி.வி. மூலம் இந்தப் பேரவையினுடைய நிகழ்ச்சிகளை, அன்றாட நிகழ்ச்சிகளை வெளியிடுவதற்கு பேரவைத் தலைவர் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு கருத்துக்கள், ஒன்று மத்திய அரசுக்கு எழுத வேண்டும் என்பது, அதையெல்லாம்தான் நான் சொல்கிறேன், அங்கே இருக்கின்ற அலுவலர்களே இதிலே தவறு செய்கிறார்களா அல்லது அவர்களுக்கு வெளியார் யாரிடத்திலேயாவது இருந்து வற்புறுத்தல் அல்லது தூண்டுதல் இருக்கின்றதா என்பதையெல்லாம்கூட அவை உரிமைக் குழு ஆராய்ந்து அறிக்கை தருமாறு சொல்லியிருக்கிறேன். அந்த அறிக்கையிலே, இந்தப் பிரச்சினையைக்கூட அவர்கள் கவனிப்பார்கள். எனவே, அவை உரிமைக் குழுவினுடைய பரிந்துரை வந்ததற்குப் பிறகுதான் நாம் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு பிரச்சினையைப் பொறுத்தமட்டில், தனியார், டி.வி.யினர் இதை ஒளிபரப்புச் செய்யலாமே என்று கேட்டீர்கள். இவர்களேகூட ஒளிபரப்புச் செய்யலாம் என்கிற ஒரு கருத்துப் பேரவைத் தலைவர்கள் மத்தியிலே இருக்கிறது. ஆனால், இவர்கள் அதற்குக் கேட்கிற பணம் இருக்கிறதே, அது நாம் தாங்க முடியாத அளவுக்கு இருக்கிறது. தனியார் என்று சொன்னால், அதைவிடக் கூடுதலாக வரும், ஆகையினால்தான் இதை இன்னும் சிந்திக்காமல் இருக்கிறோம். இல்லையென்றால் உங்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கக்கூடிய தொலைக்காட்சி, வானொலி பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டுவந்திருக்கின்ற உரிமை மீறல் பிரச்சினையை எடுத்துக்கொண்டீர்கள். இந்தச் சட்டமன்றத்தில், நாடாளுமன்றம் போன்று, சட்டமன்றத்திலே கேள்வி நேரத்தையும், சட்டமன்ற நிகழ்ச்சிகளையும், தனியார் டி.வி. மூலமாக, நாட்டு மக்களுக்கு வெளியிடுவதற்கு ஏதாவது ஒரு திட்டம் இருக்கின்றதா? அதற்கான தீர்மானங்கள் கொண்டு வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றிச் சட்டமன்ற மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். அவர் சொன்னதைத்தான் சொன்னேன். இது மத்திய சர்க்காருக்குச் சொந்தம் என்றால் ஏதோ அவர்களுக்குக் குத்தகைக்கு விட்ட தொலைக்காட்சி அல்ல. நம்முடைய தொலைக்காட்சிதான். நாடாளுமன்றத்தில் அவர்கள் செய்வதைப்போல சட்டமன்றங்களில், உங்களுடைய மேற்குவங்கம், மற்றும் திரிபுரா சட்டமன்றம் எல்லாவற்றையும் சேர்த்து, நம்முடைய

சட்டமன்றத்தையும் சேர்த்து, வெளியிட வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் வைத்திருக்கிறோம். ஆனால், அப்படி வெளியிடுவதற்கு இவர்கள் நம்மிடத்திலேயிருந்து எதிர்பார்க்கிற தொகை இருக்கிறதே, இதற்கு இன்னொரு சட்டமன்றமே கட்டிவிடலாம். அந்த அளவுக்கு எதிர்பார்க்கிறார்கள். ஆகையினாலேதான் நாம் அதை நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறோம். மத்திய அரசாங்கம் தாங்கும், அதனாலே அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய மிக முக்கியமான நிகழ்ச்சிகள், Submission of Budget வேறு இந்தமாதிரி மிக முக்கியமான பணிகளையாவது, தனியார் டி.வி. மூலம் நாம் வெளியிடுவதற்கு பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குப் போதிய பணம் நிதியமைச்சரிடமிருந்து வாங்கிக் கொடுப்பீர்களானால், அதையெல்லாம் சிந்திக்கலாம்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகள் உச்சநீதிமன்ற ஆணை காரணமாக மூடப்பட இருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகள் பல அண்மையில் சுப்ரீம் கோர்ட் உத்தரவு ஒன்றின் காரணமாக மூடப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்கிற பிரச்சினை பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று, திரு. முகமது ஆசிப், திரு. தாமரைக்கனி, திரு. தருமலிங்கம், ஆகியோர் என்னிடத்தில் ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். திரு. முகமது ஆசிப்.